**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 30/2019**

**21.04.2026**

**D.W.1- பேச்சியம்மாள்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்துக்கள் சின்னாத்தேவர் மற்றும் மாயக்காளுக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. சின்னாத்தேவர் மற்றும் மாயக்காள் எனது மாமனார், மாமியார் என்றால் சரியல்ல. பின்னத்தேவர் மற்றும் மாயக்காள் தான் எனது மாமனார், மாமியார் ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் பற்றி 13 வருடங்களாக தெரியும். வழக்கு சொத்துக்கள் பூர்வீகமாக யாருக்கு பாத்தியம் என்றால் தெரியாது. பழனிச்சாமியும், ஆண்டவரும் பிரித்துக்கொண்ட விவரம் மட்டும் தெரியும். பழனிச்சாமி, ஆண்டவரின் உடன்பிறந்தவர் பஞ்சம்மாள் என்றால் சரிதான். பழனிச்சாமியும், ஆண்டவரும் பத்திரம் எழுதி பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும், ஆண்டவருக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பிரித்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கும்போது வாதிக்கு பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆகையால் வாதி தனக்கு 1/3 பங்கு உரிமை இருப்பதாக வழக்கு போட்டுள்ளார் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1, 2 பட்டாக்கள் விசாரணையின்றி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பழனிச்சாமியின் வாரிசுகளிடமிருந்து 1/3 பங்கு வாங்குவதற்கு பதிலாக 1/2 பங்கு பி.வா.சா.ஆ.3ன் படி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என்னுடைய கிரையம் ஏற்பட்டு ஒரு வருடங்கள் கழித்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.5, 6 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 வாதியின் உரிமையை

கட்டுப்படுத்தி எழுதிக்கொடுத்துள்ளதால் மேற்படி ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

**Sd/-P.S.Ruskin Raj,**

**Sub Judge,**

**Usilampatti.**